செய்தி வெளியீடு எண். 319 நாள்: 17.06.2013

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமம் டாக்டர். மன்மோகன்சிங் அவர்களுக்கு எழுதிய 17.06.2013 ஆம் நாளிட்ட நேர்முகக் கடிதத்தின் சாராம்சம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினர், தமிழ்நாட்டைச் சேர்ந்த அப்பாவி மீனவர்கள் மீது கடற்பரப்பில் காரணமேயில்லாமல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவது பற்றியும், அவர்களைக் கடத்திச் செல்வது பற்றியும், சட்டவிரோதமாக அவர்களைக் காவலில் வைப்பது பற்றியும், நான் தங்களுக்கு மீண்டும் மீண்டும் கடிதம் எழுதி வந்துள்ளேன். இத்தகைய சம்பவம், கடைசியாக 5.6.2013 அன்று நிகழ்ந்துள்ளது. அன்று, தமிழ்நாட்டைச் சேர்ந்த 49 மீனவர்கள் இலங்கை க் கடற்படையினரால் கடத்திச் செல்லப்பட்டு, இலங்கை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டனர்.

மீனவர்களை விடுவிக்கக் கோரி, பேச்சுவார்த்தை நடத்தி, பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொண்டு 6.6.2013 ஆம் நாளிட்ட என்னுடைய கடிதத்தில் வலுவான முறையில் என்னுடைய கருத்தைத் தெரிவித்திருந்த போதிலும், மத்திய அரசின் தரப்பிலிருந்து முனைப்பான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாதது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. மத்திய வெளிவிவகாரங்கள் அமைச்சகம், மீனவர்களின் சுக துக்கங்களைப் பொருட்படுத்தாமலும் அவர்கள் மீது அக்கறை காட்டாமலும், தொடர்ந்து மௌனமாக இருந்து வருகிறது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு, இலங்கை அரசுடன் எந்தவித பேச்சுவார்த்தையும் நடத்துவதற்கான முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தோன்றுகிறது.

உண்மையில், மத்திய அரசின் அக்கறையற்ற இந்தப் போக்கு, இலங்கைக் கடற்படையினரை, தமிழ்நாட்டு மீனவர்கள் மீது அச்சம் ஏதுமின்றி வன்மையான தாக்குதலில் தொடர்ந்து ஈடுபட துணிச்சலை ஏற்படுத்தியுள்ளது. 5.6.2013 அன்று கடத்தப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏதுமறியாத அப்பாவியான ஏழ்மை நிலையிலுள்ள 8 மீனவர்கள், 15.06.2013 அன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட கொடுமையான சம்பவம் நிகழ்ந்துள்ளது. IND/TN/10/MM/56 & IND/TN/10/MM/423 ஆம் பதிவு எண்கள் உள்ள இரண்டு மீன்பிடி இயந்திரப் படகுகளில் கடலுக்குள் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்த மீனவர்கள் 15.06.2013 அன்று இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மாஜிஸ்திரேட் அவர்களால் 27.06.2013 வரையில் 12 நாட்களுக்கு ஸ்ரீலங்கா, மன்னாரில் பாதுகாவலில் வைக்கப்பட்டனர். இச்சம்பவம், தமிழ்நாட்டிலுள்ள மீனவர் சமுதாயத்தினரிடையே எதிர்ப்பையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்று கூற வேண்டிய அவசியமில்லை. அவர்கள் தற்போது மத்திய அரசின் வெளிப்படையான செயலற்ற போக்கினையும், மீனவ சமுதாயத்தினர், கடற்பரப்பில், அமைதியான முறையில் அவர்களுடைய வாழ்க்கைப் பிழைப்பைத் தொடர்ந்து நடத்துவதற்கு பாதுகாப்பு அளிக்கத் தவறியதையும் கண்டு வருத்தம் அடைந்துள்ளனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் கைது நடவடிக்கை மற்றும் தாக்குதல்கள் குறித்த எண்ணற்ற சம்பவங்கள் குறித்து மத்திய அரசு, உயர்மட்ட அளவில், வலுவான ஒருங்கிணைந்த பேச்சுவார்த்தை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

இந்த விவகாரத்தை, இலங்கை அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, படகுகளுடன் சேர்த்து, இலங்கை அரசின் பாதுகாப்பில் உள்ள இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 57 மீனவர்களையும் உடனடியாக விடுவிப்பதற்கும், 29.11.2011 முதல் இலங்கைச் சிறையில் வாடுகிற அப்பாவியான 5 மீனவர்களையும் விடுவிப்பதற்கும் ஏற்பாடு செய்யுமாறு நான், உங்களிடம் மீண்டும் அறிவுறுத்த விழைகிறேன்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.